# ஏப்பிரல் 2010 இல் தேர்தல்

## நாடுகடந்த தமிழீழ அரசு - ஒரு விளக்கம்

**அன்பான நோர்வே வாழ் தமிழீழ மக்களே!**

தமிழீழ மக்களின் அரசியல் வேட்கையினை உயிர்ப்புடன் பேணி, தமிழர் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் எனும் அடிப்படை உரிமைக் கோட்பாடுகளின் வழியாக - தமிழீழ மக்களின் சுதந்திரத்தினையும இறைமையினையும் வென்றெடுப்பதற்கான நிறுவனமாக நாடுகடந்த தமிழீழ அரசினை உருவாக்கும் முயற்சி நடைபெற்று வருவதனை நீங்கள் அறிவீர்கள்.

இந் நாடு கடந்த தமிழீழ அரசினை உருவாக்குவதற்கான சுயாதீனமான செயற்குழு திரு விசுவநாதன் உருத்திரகுமாரன் தலைமையில் செயற்பட்டு வருகிறது. நாடு கடந்த தமிழீழ அரசு எவ்வாறு உருவாக்கப்படும் என்பது தொடர்பான விபரங்கள் ஏற்கனவே திரு உருத்திரகுமாரன் அவர்களால் 16.06.2009 அன்று வெளியிடப்பட்ட முதற் செயற்திட்ட அறிக்கையிலும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட விளக்கக் கோவை மற்றும் ஏனைய அறிக்கைகளிலும் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவற்றை சுருக்கமாகக் கீழே தருகிறோம்.

**நாடு கடந்த அரசு எவ்வாறு அமைக்கப்படும்?**

இந் நாடு கடந்த தமிழீழ அரசு, புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் மக்களின் மத்தியில் நேரடி வாக்களிப்பினை நடத்தி - பெரும்பான்மை வாக்குகளினைப் பெறுவதன் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளினைக் கொண்டு அமைக்கப்படவுள்ளது.

ஈழத் தமிழர் தேசத்தின் அதி உயர் அரசியல் பீடமாகவும், ஈழத் தமிழர் தேசத்தினைப் பிரதிநிதித்துவப்படும் அரசாகவும் இது அமையவுள்ளதால் - நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகள் மக்களால் நோரடியாகத் தெரிவு செய்யப்படுவது சிறப்பானதும் அடிப்படையானதுமான குறிக்கோளாக கொள்ளப்படுகின்றது. இதன் அடிப்படையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை அமைப்பதற்காக முதற் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள், நாடு கடந்த அரசுக்காக மக்கள் பிரதிநிதிகளினை தெரிவு செய்யும் நோக்கத்திற்காக நடத்தப்படும் தேர்தலின் ஊடாக மட்டுமே தெரிவு செய்யப்படுவர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தங்கள் முதலமர்வின் போது தங்கள் அவையினை **நாடு கடந்த தமிழீழ அரசுக்கான அரசியலமைப்பு நிர்ணயசபை**யாக பிரகடனப்படுத்தி செயற்படுவர். அதன்போது நாடு கடந்த தமிழீழ அரசுக்கான அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும். அதன்பின் அந்த அரசியலமைப்பு சரத்துக்களினை அடித்தளமாக கொண்டு நாடு கடந்த தமிழீழ அரசின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

**நாடு கடந்த அரசுக்கான தேர்தல்கள்:**

பல தேசங்களினுள் சமனற்ற தொகைகளில் பரந்து வாழும் ஈழத்தமிழர் சமூகத்தினரிடையில் இருந்து - ஓரளவுக்காகவேனும் விகிதாசார பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்தக்கூடியமுறையில் தேர்தல் தொகுதிகள் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு நாடு கடந்த அரசுக்கான தேர்தல்கள் ஈழத் தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகள் அனைத்திலும் நடத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு நாட்டிலுமிருந்து தெரிவு செய்யப்படவுள்ள பிரதிநிதிகளின் எண்ணிக்கை, தேர்தலில் போட்டியிடுவதற்கான தகமைகள், வாக்களிப்பதற்கான தகமைகள் மற்றும் தேர்தல் நடைமுறைகள் தொடர்பான விபரங்கள் விரைவில் வெளியிடப்படும். இந் நடைமுறைகள், நாடு கடந்த தமிழீழ அரசினை உருவாக்குவதற்கான அமைக்கப்பட்ட அறிஞர் மட்ட மதியுரைக்குழுவின் துணையுடன் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. நாடுகடந்த தமிழீழ அரசு என்பது ஈழத்தமிழரின் தேசிய அரசியல் அபிலாசைகளினை பொருத்தமான இராசதந்திரவழிமுறைகளினூடாக அடுத்தகட்டத்திற்கு முன்னெடுக்கும் உயரிய அமைப்பாக அமையவிருப்பதனால் அதனை அமைப்பதில் மிக நிதானமான வேகத்தினைக் கைக்கொள்ள வேண்டியுள்ளது. அனைத்து நாடுகளின் வேறுபட்ட நிலைமைகளுக்குள் ஒரு பொதுத்தன்மையினையும் அணுகுமுறையையினையும் கைக்கொள்ள வேண்டியிருப்பதனால் தேர்தல் மற்றும் செயற்பாட்டு விதிமுறைகள் தயாரிப்பதில் அதிகூடிய கவனத்தினை கொண்டிருக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டே அதீத வேகத்தினை கொண்டிருக்காமல் பொருத்தமான கால அவகாசத்தினை எடுத்து உரிய முறையில் தயாரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. தற்போது தயாரிக்கப்படும் திட்ட விபரங்கள் மக்கள் கருத்தாலோசனைக்குட்படுத்தப்பட்டு முழுமைப்படுத்தப்படும்.

இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான விதிமுறைகளும் நடைமுறைகளும் வெளிப்படுத்தப்பட்ட பின்னர் – 2010 ஏப்ரல் மாதத்திற்குள் அனைத்து நாடுகளிலும் தேர்தல்களை நடத்தி முடிப்பதற்குத் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.

**நாடுவாரியான செயற்குழுக்கள்:**

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்கும் செயற்பாடுகளை மேற் கொள்வதற்கான நாடுவாரியான செயற்பாட்டுக்குழுக்கள் (Country wise working Groups – CWGs) தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக கனடா, பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, தென்ஆபிரிக்கா, நோர்வே ஆகிய நாடுகளுக்கான செயற்பாட்டுக்குழு விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஏனைய நாடுகளின் செயற்பாட்டுக்குழு விபரங்களும் விரைவில் வெளியிடப்படும். தேவையேற்படும் பட்சத்தில் நாடுகளின் தேவைக்கிணங்க செயற்பாட்டுக்குழுக்கள் விரிவாக்கம் செய்யப்படும்.

இந் நாடுவாரியான செயற்பாட்டுக்குழுக்களின் ஊடாக ஒவ்வாரு நாடுகளிலும் நாடு கடந்த அரசாங்கத்தினை உருவாக்கும் பணிகள் செயற்படுத்தப்படுகின்றன. இந் நாடு வாரியான செயற்பாட்டுக்குழுக்கள் சுயாதீனமான குழுக்களாகும். தத்தமது நாடுகளில் நாடு கடந்த அரசாங்கத்தை அமைப்பதற்கான தேர்தல்களை மக்கள் மத்தியில் நடாத்தி அரசாங்கத்தினை அமைக்கும் வரை மேற்கொள்ளப்படவேண்டிய அனைத்துப் பணிகளையும் இக்குழுக்கள் ஒருங்கிணைத்து மேற்கொள்ளும்.

நாடுகடந்த அரசாங்கத்தினை அமைக்கும் பணி நிறைவுற்றதும் இக் குழுக்கள் தமது பணிகளை நிறைவுக்குக் கொண்டு வரும்.

**ஜெனீவாவில் தலைமைச் செயலகம்:**

நாடு கடந்க தமிழீழ அரசினை உருவாக்குவதற்கான செயற்குழுவுக்கான தலைமைச் செயலகம் ஜெனீவாவில் அமைக்கப்பட்டுள்ளது.

இத் தலைமைச் செயலகம், அனைத்து நாடுகளிலும் மேற்கொள்ளப்படும் நாடு கடந்த அரசினை அமைக்கும் பணிகளை ஒழுங்கிணைப்பதுடன், நமது தாயகத்தில் சிறிலங்கா அரசின் தடுப்பு முகாம்களில் வாடும் மக்களதும் போராளிகளதும் நலன் பேணும் மனிதாபிமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும்.

ஈழத் தமிழர் தேசத்திற்கு எதிராக சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்களை எதிர்த்தும் இத் தலைமைச் செயலகம் செயற்படும்.

**நாடு கடந்த தமிழீழ அரசினை உருவாக்குவதற்கான நோர்வே செயற்குழு**

நாடு கடந்த தமிழீழ அரசினை உருவாக்குவதற்காக நோர்வேயிலிருந்து பிரிதிநிதிகளைத் தேர்வு செய்வதற்கான தேர்தலை நடத்தி – பிரதிநிதிகளைத் தேர்வு செய்து அனுப்பும்வரை நாடு கடந்த அரசினை உருவாக்குவதற்கான நோர்வே செயற்குழுவினராகிய எமது செயற்பாடுகள் இடம் பெறும்.

தற்போது நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தொடர்பாக கருத்துப் பரப்புரைகளை நாம் மேற்கொள்ள ஆரப்பித்துள்ளோம். நோர்வேயில் உள்ள தமிழ் அமைப்புக்களோடும் தமிழ் மக்களோடும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு இந்தத் திட்டத்திற்கு ஆதரவு திரட்டும பணிகளையும் நாம் மேற்கொள்வோம். தமிழரிடையே மட்டுமன்றி தமது நாடுகளில் உள்ள பொதுச் சமூகத்தின் (Civil Society) ஆதரவையும் இவ்வரசை அமைக்கும் திட்டத்திற்கு நாம் திரட்டுவோம். மேலும் நோர்வேயின் அரசியல் தலைவர்களதும் ஆதரவை இந் நாடுகடந்த அரசு அமைக்கும் முயற்சிக்குத் திரட்டும் செயற்பாடுகளிலும் நாம் ஈடுபடுவோம்.

தேர்தல் நடைமுறை தொடர்பான விபரங்கள் அறிவிக்கப்பட்டவுடன், ஏனைய நாடுகளில் நடைபெறுவதனைப் போல நாடு கடந்த தமிழீழ அரசினை நோர்வேயில் இருந்து பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலை நடத்தி, பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்பி வைப்போம்.

**ஏன் இரு தேர்தல்கள்?**

நாடு கடந்த தமிழீழ அரசு - நோர்வே ஈழத் தமிழர் அவை ஆகியவற்றிற்கான இரு தேர்தல்கள் நோாவேயில் நடைபெறுவது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் மக்கள் மத்தியில் இடம் பெற்று வருவதனை நாம் அறிவோம். இது தொடர்பாக சில விடயங்களை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது எமது கடமையாகும்.

இந் நாடு கடந்த தமிழீழ அரசினை உருவாக்குவதற்கான முயற்சி உலகமெங்கும் - நாடு கடந்த ரீதியில், பாரிய பரந்தளவிலான மக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியாகும். இம் முயற்சிக்காக நோர்வேயில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளை நாம் முன்னெடுக்கிறோம். நாடு கடந்த தமிழீழ அரசினை உருவாக்குதற்கான அடிப்படைத்திட்டங்கள் நோர்வேக்கு மட்டும் உரியவை அல்ல. ஈழத்தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகள் அனைத்துக்கும்

பொதுவானவை. இப் பொதுத்திட்டத்திற்கு உட்பட்டே நாம் நோர்வேயில் நமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறோம். இதே போன்று நோர்வேயில் முன்னெடுக்கப்படும் எந்த நோர்வேக்குரிய திட்டமும் பொதுத்திட்ட முன்னெடுப்பான நாடு கடந்த தமிழீழ அரசுடன் ஒத்திசைவாக முன்னெடுக்கப்பட்டு நடைமுறைக்கு வருவதே கூடுதல் பொருத்தமாக இருக்கும்.

இதனைக் கருத்திற் கொண்டு, நோர்வே ஈழத்தமிழர் அவைக்கு தேர்தல் திகதி அறிவிக்கப்பட முன்னர், நாடு கடந்த தமிழீழ அரசுக்கும் நோர்வே ஈழத்தமிழர் அவைக்கும் இடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தி - இவ்விரு அமைப்புகளுக்கும் ஒரே நாளில் இணைந்த வகையில் தேர்தலை நடத்தக்கூடிய திட்டமொன்று நமது ஆர்வலர்களால் நோர்வே ஈழத் தமிழர் அவைக்கான அமைப்புக்குழுவினரிடம் முன் வைக்கப்பட்டது. இத் திட்டத்தை நோர்வே ஈழத்தமிழர் அவைக்கான அமைப்புக்குழு நிராகரித்து தேர்தல் திகதியினை அறிவித்து, தேர்தல் முன்னெடுப்பினை மேற்கொண்டது. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட இணைந்த வகையில் ஒரே நாளில இரண்டு அமைப்புக்களுக்கும் தேர்தல்களை நடத்துவதற்கான வாய்ப்பை உருவாக்குவதந்காக நோர்வே ஈழத்தமிழர் அவைக்கான தேர்தலை சற்றுப் பிற்போடுவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டன. இதனாலேயே நோர்வேயில் இவ்விரு அமைப்புக்களுக்காக இரு தேர்தல்களை தனித் தனியாக நடத்தும் நிலை உருவாகியது. நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தேர்தலை நடத்தி நோர்வேயின் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அனுப்புவது தொடர்பான செயற்பாடுகளை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

**நோர்வேயில் நகரவாரியான செயற்குழுக்கள்:**

நோர்வேயில் நாடு கடந்த தமிழீழ அரசினை உருவாக்குவதற்கான பணிகளை மேற்கொள்வதற்கு நகரங்கள் வாரியாக செயற்குழுக்களை அமைத்து வருகிறோம். இச் செயற்குழுக்களில் இணைந்து பணியாற்ற விருப்புவர்களை எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**தொடர்புகளுக்கு:**

கில்லறி லியோ

நோர்வே செயற்பாட்டுக்குழுவின் இணைப்பாளர்

தொலைபேசி: 97696623

மின்னஞ்சல்: ptgte.norway@gmail.com